முக்கிய வார்த்தைகள்:
*சோதனைகள் / சவால்கள்*
*பொறுமை / ஓரிறை நம்பிக்கை*
*உறுதி / முயற்சி*

**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**
**26 செப்டம்பர் 2025 / 04 ரபீவுல் ஆகிர் ஹிஜ்ரி 1447**

# கஷ்டமான காலத்திலும் சகிப்புத்தன்மையுடன் காணப்படுவது

ٱلْحَمْدُ لِلَّهِ ٱلَّذِي أَرْسَلَ رَسُولَهُ بِٱلْهُدَىٰ وَدِينِ ٱلْحَقِّ لِيُظْهِرَهُ عَلَى ٱلدِّينِ كُلِّهِ وَكَفَىٰ بِٱللَّهِ شَهِيدًا. أَشْهَدُ أَنْ لَا إِلَٰهَ إِلَّا ٱللَّهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ نَبِيَّنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. ٱللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَىٰ سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَىٰ آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ ٱللَّهِ، ٱتَّقُوا ٱللَّهَ حَقَّ تُقَاتِهِ وَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنْتُمْ مُسْلِمُونَ.

**ஜும்ரதல் முஃமினீன் ரஹிமகுமுல்லாஹ்**

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் அனைத்து கட்டளைகளுக்கு அடிபணிந்து நடப்பதன் மூலமாகவும், அல்லாஹ் தடைசெய்துள்ள அனைத்து விஷயங்களிலிருந்து தவிர்ந்து கொள்வதன் மூலமாகவும் அல்லாஹ்வின் மீதான நமது ”தக்வா” [பக்தியை] அதிகரித்துக் கொள்வோமாக! நாம் அனுபவிக்கும் ஒவ்வொரு மகிழ்ச்சியும், எதிர்கொள்ளும் ஒவ்வொரு சோதனையும் அல்லாஹ்வின் பக்கம் நாம் நெருங்குவதற்குக் காரணமாக அமையட்டுமாக! அல்லாஹ்வின் பாதையில் நாம் தொடர்ந்து நிலைத்து நிற்பதற்கான ஆற்றலை அல்லாஹ் நமக்கு வழங்குவானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**அன்பும் அருளுமிக்க ஜமாஅத்தார்களே!**

நாம் கடுமையான சோதனையை எப்போதாவது எதிர்கொண்டோமா? அல்லது மற்றவர்கள் கஷ்டப்படுவதை நாம் கண்டுள்ளோமா? அப்போது நமது உள்ளங்களில் "*இவ்வாறு நிகழ்வதற்கு அல்லாஹ் ஏன் அனுமதிக்கின்றான்?"* என்ற கேள்வி எழுந்ததுண்டா?

நாம் ஓரிறை நம்பிக்கையாளர்கள் எனும் ரீதியில், அனைத்து சோதனைகளும் அல்லாஹ்வின் புறத்திலிருந்து தான், ஏற்படுத்தப் படுகின்றன என்பதை நாம் உறுதியாக நம்புகிறோம். சோதனைகள் நமது வாழ்க்கையின் ஒரு பகுதியாக உள்ளன; ஒவ்வொரு மனிதரும் நிச்சயம் **சோதிக்கப்படுவார்.** அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா திருக்குர்ஆனின் "அல்-பகரா" எனும் அத்தியாயத்தின் 155-வது வசனத்தில் கூறுகிறான்:

وَلَنَبْلُوَنَّكُم بِشَىْءٍ مِّنَ ٱلْخَوْفِ وَٱلْجُوعِ وَنَقْصٍ مِّنَ
ٱلْأَمْوَٰلِ وَٱلْأَنفُسِ وَٱلثَّمَرَٰتِ ۗ وَبَشِّرِ ٱلصَّٰبِرِينَ ﴿١٥٥﴾

பொருள்: "நிச்சயமாக நாம் உங்களை ஓரளவு அச்சத்தாலும், பசியாலும், பொருள்கள், உயிர்கள், விளைச்சல்கள் ஆகியவற்றின் இழப்பினாலும் சோதிப்போம்; ஆனால் பொறுமையுடையோருக்கு [நபியே!] நீர் நன்மாராயங் கூறுவீராக!"

**அன்பிற்குரிய சகோதரர்களே**!

உண்மையில், நமக்கு ஏற்படும் **சோதனைகள்**, சிலவேளைகளில், அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் புறத்திலிருந்து நமக்கு வழங்கப்படும் **"கஃப்ஃபாராஹ்"** வாக அமைந்து விடும்; அதாவது, நமது பாவங்களுக்கான, பாவ நிவாரணப் பரிகாரமாக அமைந்து விடும். எனினும், நமக்கு ஏற்படுத்தப்படும் ஒவ்வொரு **சோதனையும்** நமக்கானத் தண்டனை என்றோ அல்லது அவமானம் என்றோ நாம் கருதி விட முடியாது.

இந்த உண்மையை, இறைத்தூதர்களும் **சோதிக்கப்பட்டார்கள்** என்பதன் மூலமும், வாழ்க்கையில் பல கஷ்டங்களைச் சகித்துக் கொள்ள வேண்டிய நிலை அவர்களுக்கும் ஏற்பட்டது என்பதன் மூலமும் நாம் அறியலாம். இறைத்தூதர் முஹம்மது[ஸல்] அவர்கள் மக்காவில் அவர்களின் சொந்த மக்களால் அநீதமிழைப்பட்டு, ஒடுக்கப்பட்டார்கள்; மக்காவிலிருந்து வெளியேற்றப்பட்டார்கள். இறைத்தூதர் யஃகூப் [அலை] அவர்கள் தனது மகனை இழந்தார்கள்; அதன் மூலம் அவர்கள் **சோதிக்கப்பட்டார்கள்.** இறைத்தூதர் அய்யூப் [அலை] அவர்களோ கடுமையான நோயால் பல்லாண்டுகள் பாதிக்கப்பட்டார்கள்; அத்துடன், அவர்கள் தனது செல்வத்தையும் குடும்பத்தாரையும் இழந்தார்கள்; அதன் மூலம் அவர்கள் சோதிக்கப்பட்டார்கள்.

அச்சோதனைகளை, இறைத்தூதர்களாகிய அவர்கள் எப்படி எதிர்கொண்டார்கள் என நான் சிந்திக்க வேண்டும். நமக்கு முன்மாதிரியாக நாம் எடுத்துக் கொண்டுள்ள அந்த இறைத்தூதர்கள் **صَبْرٌ جَمِيل** [ஸப்ருன் ஜமீல்] அதாவது அழகிய பொறுமையின் மூலம் அச்சோதனைகளை எதிர்கொண்டார்கள். அவர்கள் எவ்வித புகாரும் செய்யாமல், அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் உதவி கிடைக்கும் என்பதில் பரிபூரணமான ஆதரவுடன் காணப்பட்டார்கள்.

இவ்வுதாரணங்களின் மூலம், ஒரு "முஃமின்" [ஓரிறை நம்பிக்கையாளர்] நெருக்கடி நிலைகளையும், **வாழ்க்கைச் சவால்களையும்** எதிர்கொள்ளும் போது விரக்தியாகி, நிராசையில் விழுந்து விட மாட்டார் என்பதை நாம் அறியலாம். ஓரிறை நம்பிக்கையாளர், தான் எடுத்துக் கொண்டுள்ள உறுதிமொழியாகிய ஓரிறை நம்பிக்கையை உறுதியாகப் பற்றிப் பிடித்துக் கொள்வதுடன், பொறுமையின் சாராம்சத்தைப் பற்றிய தனது புரிதலை மீண்டும் சிறப்பாக்கிக் கொள்வார்.

**அன்பும் அருளுமிக்க ஜமாஅத்தார்களே!**

நாம் வாழ்க்கைச் சவால்களை எதிர்கொள்ளும் போது, **நமது ஓரிறை நம்பிக்கை** நமக்கு எவ்வாறு உதவியாக இருக்கும்; நம்மிடம் சிறப்பான நோக்கத்தை எப்படி உருவாக்கும் என நாம் இங்கு சிந்திக்க இருக்கின்றோம்:

**முதலாவதாக: சோதனைகளை, அல்லாஹ்வின் பக்கம் நெருங்குவதற்கானக் காரணிகளாக நாம் கருத வேண்டும்.**

ஓரிறை நம்பிக்கையாளர், சோதனைகளை, அல்லாஹ் தனது அடியார்கள் மீது கொள்ளும் அன்பின் அடையாளமாகக் கருதுவார். இமாம் அல்-இஜ்ஜ் இப்னு அப்துஸ்ஸலாம் அவர்கள், தனது **"அல்-ஃபிதன் வல் பலாயா"** எனும் நூலில் குறிப்பிடும் போது, நமக்கு ஏற்படும் ஒவ்வொரு துன்பம் மற்றும் சோதனைக்குப் பின்பு பல தத்துவங்கள் உள்ளதாகக் கூறுகிறார்கள்; அவற்றில் சில பின்வருமாறு:

- மனிதன் எனும் ரீதியில், நம்மிடம் காணப்படும் பலஹீனத்தை அவை நமக்கு ஞாபகப்படுத்தும்.
- அல்லாஹ்வின் மீதான நமது நம்பிக்கையைப் பலப்படுத்தும்
- நமது உள்ளத்தை நேர்மையானதாகவும் பணிவுமிக்கதாகவும் கர்வத்தை விட்டும் அகன்றதாகவும் ஆக்கும்
- நமக்கு நீண்ட நாட்களாக அல்லாஹ்வினால் வழங்கப்பட்டு வரும் நலன்களுக்காக, அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்த வேண்டுமென்ற உணர்வை நம்மிடம் ஏற்படுத்தும்

எனவே, **சோதனை** என்பது அல்லாஹ் நம்மை வெறுக்கின்றான் என்பதற்கான அடையாளமல்ல; மாறாக, அல்லாஹ்வின் பக்கம் நாம் மேற்கொண்டு நெருங்க வேண்டுமென நமக்கு அழைப்பு விடுப்பது தான் சோதனையாகும்.

**இரண்டாவதாக: ஓரிறை நம்பிக்கையாளருக்கு ஏற்படும் ஒவ்வொரு விஷயமும் அவருக்கு நல்லதாகவே இருக்கும் எனக் கருத வேண்டும்.**

இதுதான், ரசூலுல்லாஹி[ஸல்] அவர்கள் பின்வரும் ஹதீதில் கூறும் கருத்தின் சாராம்சமாகும்;

”ஓரிறை நம்பிக்கையாளரின் விஷயங்கள் அனைத்தும் ஆச்சரியமாக உள்ளன; அவரது அனைத்து விவகாரங்களும் அவருக்கு நன்மையாக அமைந்து விடுகின்றன. அவர் ஓர் அருட்கொடையை அடைந்தால் அதற்காக அவர் நன்றி செலுத்துகிறார்; அது அவருக்கு நன்மையாக அமைந்து விடுகிறது. அவர் ஏதாவதொரு சோதனையை எதிர்கொண்டால் பொறுமையாக இருக்கின்றார்; அதுவும் அவருக்கு நன்மையாக அமைந்து விடுகிறது” [ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் முஸ்லிம் ரஹ்]

இஸ்லாத்தின் கருத்துக்கள் எவ்வளவு சிறப்பாக உள்ளன எனச் சிந்தித்துப் பாருங்கள்! நாம் எதிர்கொள்ளும் விஷயங்கள், துன்பமாகவோ அல்லது இன்பமாகவோ எப்படி இருந்தாலும் அவற்றை நாம் பொறுமையுடனும் நன்றி செலுத்தும் தன்மையுடனும் எதிர்கொள்ளும் காலமெல்லாம் அவை நமக்கு நன்மையாகவே அமைந்து விடுகின்றன.

**வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள மரியாதைக்குரிய ஜமாஅத்தார்களே**!

இன்று கூட, உடல்நலம், வருவாய், குடும்பம், சமூக அழுத்தங்கள் போன்ற பல நெருக்கடிகளையும் சவால்களையும் மனிதகுலம் தொடர்ந்து எதிர்கொண்டு வருகிறது. இந்தச் சோதனைகளெல்லாம் மனிதர்கள் எந்தளவு பலஹீனமானவர்களாக இருக்கின்றார்கள் என்பதையும், அல்லாஹ்வின் உதவியின்றி அவர்களால் வாழ முடியாது எனவும் என நமக்கு நினைவூட்டுகின்றன.

எனினும், இச்சோதனைகளை நாம், ஓரிறை நம்பிக்கை, பொறுமை மற்றும் தவக்கல் மூலமாக எதிர்கொண்டால், அவை நமக்குச் சிறந்த வாய்ப்புகளாக அமைந்து விடும். அதாவது, நமது உள்ளங்களைப் பலப்படுத்தக்கூடிய, நமது ஓரிறை நம்பிக்கை எனும் விளக்கை மேற்கொண்டு பிரகாசிக்கச் செய்யக் கூடிய, மற்றவர்களுக்குக் கிருபை காட்ட வேண்டும்; அவர்களுக்கு உதவ வேண்டும் எனும் சிந்தனையைத் தூண்டக்கூடிய வாய்ப்புகளாக அமைந்து விடும். எவர்களின் ஓரிறை நம்பிக்கையானது, இன்பம், துன்பம் ஆகிய

அனைத்து நிலையிலும் நிலைத்து நிற்கின்றதோ அந்த நல்லடியார்களில் ஒருவராக அல்லாஹ் நம்மை ஆக்குவானாக!

யா அல்லாஹ்! யா ரஹ்மான்! எங்களின் உலகச் சவால்களை எளிதாக்குகின்ற, உறுதியான நிலையை எங்களுக்கு வழங்குவாயாக! யா ரஹீம்! எங்களின் ஓரிறை நம்பிக்கை விஷயத்தில் எவ்வித சோதனையையும் ஏற்படுத்தி விடாதே; யா முஜீப்! எங்களின் விவகாரங்கள் மற்றும் விஷயங்களை முன்னேற்றம் காணச் செய்வாயாக! எங்களின் பிரார்த்தனைகளை ஏற்றுக் கொள்வாயாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ العَظِيْمَ لِي وَلَكُمْ، فَاسْتَغْفِرُوهُ إِنَّهُ هُوَ الغَفُوْرُ الرَّحِيْم.**

## இரண்டாவது பிரசங்கம்

الحَمْدُ للهِ حَمْدًا كَثِيرًا كَمَا أَمَرَ، وَأَشْهَدُ أَن لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ اللهِ، اِتَّقُوا اللهَ تَعَالَى فِيمَا أَمَرَ، وَانتَهُوا عَمَّا نَهَاكُم عَنْهُ وَزَجَرَ.

**அன்பும் அருளுமிக்க ஜமாஅத்தார்களே!**

வாழ்க்கையில், தனிநபர் எனும் ரீதியிலோ குடும்பம் அல்லது சமுதாயம் எனும் ரீதியிலோ பல சோதனைகளை நாம் எதிர்கொள்பவர்களாக இருக்கலாம்; சிலவேளைகளில், அச்சோதனைகள் மிகவும் கசப்பானவை யாகவும், சகித்துக் கொள்ள முடியாதவையாகவும் இருக்கலாம். சிலவேளைகளில், அவை எந்தளவு கடுமையானவையாக இருக்குமெனில், அவற்றின் காரணமாக நம்மிடம் ஏற்படும் உணர்ச்சிகள், நமது ஈமான் எனும் ஓரிறை நம்பிக்கையின் வழிகாட்டுதலைக் கூட மிகைப்பவையாக ஆகி விடலாம். அச்சோதனைகள், பேசப்பட்ட அல்லது செயல்படுத்தப்பட்ட அவமானங்களாகவோ அல்லது அநீதங்களாகவோ இருக்கலாம்; அவை பிடிவாத குணம் அல்லது அறியாமையின் காரணமாக வேண்டுமென்றே செய்யப்பட்டவையாகவும் இருக்கலாம். இவ்வாறுதான், சமீபத்தில் நமது பல பள்ளிவாசல்கள் எதிர்கொண்டன; அல்லாஹ்வின் வீடுகளாக உள்ள பள்ளிவாசல்களின் புனிதத்தன்மைக்கு எதிராக வரம்பு மீறி நடந்து கொள்ளப்பட்டது.

இச்செயல்களின் பின்னணியில் உள்ள நோக்கங்களையும் காரணங்களையும் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா மட்டுமே அறிந்தவனாக இருக்கின்றான். நாம் இறைத்தூதர்[ஸல்] அவர்களின் போதனைகளில் தொடர்ந்து நிலைத்து நிற்கும் முஸ்லிம்கள் எனும் ரீதியில், நமது பாசத்திற்குரிய இறைத்தூதர் முஹம்மது[ஸல்] அவர்களின் வழிமுறையை உறுதியாகப் பற்றிப் பிடிப்பது அவசியமாகும். இறைத்தூதர்[ஸல்] அவர்கள், மனிதகுலம் அனைவருக்கும், அனைத்து

விஷயங்களிலும் கிருபை மற்றும் நன்மையின் தூதைத் தான் கொண்டு வந்தார்கள்.

நமக்குத் தீமை செய்தவர்களை நாம் மன்னிப்பதன் மூலமாகவும், நன்மையைப் பரப்புவதன் மூலமாகவும் தொடர்ந்து நாம் நற்குணத்தைக் கடைப்பிடிக்க வேண்டுமென இறைத்தூதர்[ஸல்] அவர்கள் நமக்குப் போதித்துள்ளார்கள்.

இதுதான், முஹம்மது[ஸல்] அவர்களின் சமுதாய மக்கள் மேற்கொள்ள வேண்டியப் பணியாகும். இது போன்ற செயல்கள் நமது சமுதாயத்தின் அமைதியையும் சாந்தியையும் கெடுக்க வேண்டுமென்ற நோக்கத்தில் செய்யப்பட்டிருக்குமெனில், அறிந்து கொள்ளுங்கள்! அவை நமது ஈமானின் உயிரோட்டத்தைப் பலப்படுத்துவையாக அமையுமே தவிர, பலஹீனப் படுத்தி விடாது. இறைத்தூதர்[ஸல்] அவர்களின் வழிகாட்டுதலின் பிரகாரம், அமைதியை உறுதியாகப் பற்றிப் பிடிப்பவர்களாகவே நாம் ஆகுவோம். அமைதியின்றி தடுமாறமாட்டோம். அச்செயல்கள் பல மதங்கள் மற்றும் மக்களுக்கிடையேயுள்ள உறவுகளைச் சேதப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தில் செய்யப்பட்டிருந்தால், நாம் தெளிவாகக் கூறுகிறோம்; தனிநபர்கள் அல்லது சிறிய வகுப்பார்கள் செய்த அச்செயல்களை ஒட்டுமொத்த இனம் அல்லது மதத்தினர் செய்ததாக ஒருபோதும் கருதமாட்டோம்.

எனவே, எனது அன்பிற்குரிய சகோதரர்களே! நமது அந்தஸ்துகள் என்ன என்பதைப் புரிந்து, நமக்குள் ஒற்றுமையைப் பலப்படுத்திக் கொள்வோமாக! இது போன்ற சம்பவங்கள் நமது ஒற்றுமையைப் பாதுகாக்க வேண்டுமென நமக்கு நினைவூட்டுபவையாக அமையட்டுமாக! இறைத்தூதர் முஹம்மது [ஸல்] அவர்களை நாம் நேரடியாகப் பார்க்காவிட்டாலும் அவர்களின் போதனைகள் நமது உள்ளங்களில் ஆழமாக வேரூன்றியுள்ளன என்பதற்கு ஆதாரமாக இச்சம்பவங்கள் அமையட்டுமாக! மேலும், நிச்சயமற்ற செய்திகளைப் பரப்புவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்; அப்போதுதான், நிலைமை மேலும் மோசமாகாமலிருக்கும்; நாம் ஷைத்தானின் வலையில் சிக்குவதிலிருந்து தப்பிக்கலாம். நாம் வீழ்ச்சியடைய வேண்டுமென

ஷைத்தான் தொடர்ந்து எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றான் என்பதைக் கவனத்தில் கொள்ளுங்கள்.

أَلَا صَلُّوا وَسَلِّمُوا عَلَى النَّبِيِّ الْمُصْطَفَى، فَقَدْ أَمَرَنَا اللهُ بِذَلِكَ حَيْثُ قَالَ فِي كِتَابِهِ العَزِيزِ: إِنَّ اللهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ يَا أَيُّهَا الَّذِينَ ءَامَنُوا صَلُّوا عَلَيهِ وَسَلِّمُوا تَسْلِيمًا. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِ سَيِّدِنَا مُحَمَّدٍ.

وَارْضَ اللَّهُمَّ عَنِ الخُلَفَاءِ الرَّاشِدِينَ المَهْدِيِّينَ سَادَاتِنَا أَبِي بَكْرٍ وَعُمَرَ وَعُثْمَانَ وَعَلِيٍّ، وَعَن بَقِيَّةِ الصَّحَابَةِ وَالقَرَابَةِ وَالتَّابِعِينَ، وَتَابِعِي التَّابِعِينَ، وَعَنَّا مَعَهُم وَفِيهِم بِرَحْمَتِكَ يَا أَرْحَمَ الرَّاحِمِينَ.

اللَّهُمَّ اغْفِرْ لِلمُؤْمِنِينَ وَالمُؤْمِنَاتِ، وَالمُسْلِمِينَ وَالمُسْلِمَاتِ، الأَحْيَاءِ مِنْهُم وَالأَمْوَاتِ. اللَّهُمَّ ادْفَعْ عَنَّا البَلَاءَ وَالوَبَاءَ وَالزَّلَازِلَ وَالمِحَنَ، مَا ظَهَرَ مِنْهَا وَمَا بَطَنَ، عَن بَلَدِنَا خَاصَّةً، وَسَائِرِ البُلْدَانِ عَامَّةً، يَا رَبَّ العَالَمِينَ. رَبَّنَا آتِنَا فِي الدُّنْيَا حَسَنَةً، وَفِي الآخِرَةِ حَسَنَةً، وَقِنَا عَذَابَ النَّارِ.

عِبَادَ اللهِ، إِنَّ اللهَ يَأْمُرُ بِالعَدْلِ وَالإِحْسَانِ وَإِيتَاءِ ذِي القُرْبَى، وَيَنْهَى عَنِ الفَحْشَاءِ وَالمُنْكَرِ وَالبَغْيِ، يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُونَ، فَاذْكُرُوا اللهَ العَظِيمَ يَذْكُرْكُمْ، وَاشْكُرُوهُ عَلَى نِعَمِهِ يَزِدْكُمْ، وَاسْأَلُوهُ مِن فَضْلِهِ يُعْطِكُم، وَلَذِكْرُ اللهِ أَكْبَرُ، وَاللهُ يَعْلَمُ مَا تَصْنَعُونَ.